# அரசு - புலிகளுடன் தொடர்ந்தும் தொடர்பு!


விலை ரூபா 5-00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2026 தை 28 இதழ் 372
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 11-2-1995


## அமைச்சர் கதிர்காமர் தகவல்

(கொழும்பு)

தனி ஈழக் கோரிக்கைகள் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தப்படமாட்டாது என வெளிவிவகார அமைச்சர் திரு. லஷ்மன் கதிர்காமர் கூறியுள்ளார்

வெளிவிவகார அமைச்சர் திரு. லஷ்மன் கதிர்காமர் தன்ஸானியாவில் உலக வங்கி மாநாட்டில் உரையாற்றும் போது இவ்வாறு குறிப்பிட்டார்.

இனப் பிரச்சினைக்கு தீர்வு காண ஆகக் கூடுதலான அதிகாரத்தை பரவலாக்குவதற்குப் புதிய அரசாங்கம் தயா

(4ம் பக்கம் பார்க்க)

## மன்னிப்புச்சபை தூதுக்குழு
# இலங்கை விஜயம்

(கொழும்பு)

சர்வதேச மன்னிப்பு சபையின் தூதுக்குழு ஒன்று இலங்கைக்கு விஜயம் செய்துள்ளது. நாட்டின் தற்போதைய மனித உரிமைகள் பற்றி ஜனாதிபதி சந்திரிகா உட்பட அரச அதிகாரிகளுடன் கலந்துரையாடுவதற்காக அவர்கள் இந்த விஜயத்தை மேற்கொண்டுள்ளனர்.

சர்வதேச மன்னிப்புசபையின் பிரதிசெயலாளர் நாயகம் டோர்க்லிவன்ஸ் தலைமையிலான மூன்று அங்கத்தவர்கள் கொண்ட குழு 1988ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 1ம் திகதி தொடக்கம் இடம் பெற்ற ஆட்கள் காணுமல்

(4ம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு அமைச்சு செயலர்
# ஜெனரல் ஹமில்டன் பதவியில்
# பாலபத்தபெண்டி நியமனம்!

## படையினர் ஆதிக்கம் இப்போது சந்திரிகா கையில்!!

[கொழும்பு]

பாதுகாப்பு செயலர் பதவியிலிருந்து இராஜினுமாச் செய்த ஜெனரல் ஹமில்டன் வனசிங்க நேற்று தமது பதவியிலிருந்து ஒய்வுபெறுவதாக அறிவித்தார். இதனையடுத்து பாதுகாப்பு அமைச்சின் பதில் செயலாளராக ஜனதிபதியின் செயலர் பாலபத்த பெண்டி ஜனதிபதியினல் நியமிக்கப்பட்டார், படையினர் பூரண கட்டுப்பாடு இந்த நியமனத்தின் மூலம் ஜனதிபதி சந்திரிகாவின் கைகளுக்கு வந்துவிட்டதாக இராணுவ அரசியல் விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்.

(4ம் பக்கம் பார்க்க)

பாதுகாப்புக்கு கூடுதல் நிதி
## இனப்பிரச்னை தீர்வு முயற்சியை பாதிக்காது
– பீரிஸ்

(கொழும்பு)

பாதுகாப்புச்கு கூடுதல் நிதி ஒதுக்கப்படுவதினல் இனப் பிரச்னைக்கு தீர்வு காணும் முயற்சியில பாதிப்புகள் ஏதும் ஏற்படமாட்டாது என பிரதி நிதி அமைச்சர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இராணுவ நடவடிக்கைகள் இடம்பெருவிட்டால் பாது

(4ம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு பதவியிலிருந்து ஓய்வு பெறுவதில் மகிழ்ச்சி
– ஜெனரல் ஹமில்டன்

(கொழும்பு)

பாதுகாப்பு செயலர் பதவியிலிருந்து நான் இராஜினுமாச் செய்தேன் என்று கூறியது தவறு. அரசின் கொள்கைக்கு அமைய பாதுகாப்பு செயலராக சிவிலியன் ஒருவர் நியமிக்கப்படவேண்டும் என்ற காரணத்திற்காக நான் எனது பதவியிலிருந்து விலகியுள்ளேன்.

ஜெனரல் ஹமில்டன் வனசிங்க பி. பி.சிக்கு நேற்று இவ்வாறு தெரிவித்தார்.

பாதுகாப்பு செயலர் பதவியில் சிவிலியன் ஒருவர் இருக்க வேண்டும் என அரசு நினைக்கிறது. ஆனல் நான் அப்படி நினைக்கவில்லை. ஆனல் அரசின் இந்தக்கொள்கைக்கு இணக்கம் தர நான் மறுக்கவுமில்லை. இதனல் தான் இந்தப் பதவியிலிருந்து விலகியுள்ளேன்.

பதவியிலிருந்து விலகுவதில் நான்கவலையடையவில்லை நான் மகிழ்ச்சியே அடைகிறேன்- ஏனெனில் எந்த ஒரு மனிதரும் ஒரு காலகட்டத்தில் ஒய்வு பெறவேண்டும்.

(2-ம் பக்கம் பார்க்க)

## ஆயுதக் கொள்வனவு விசாரணைகள் ஆரம்பம்

(கொழும்பு)

ஜெனரல் ஹமில்டன் வனசிங்க பாதுகாப்புச் செயலராகக் கடமையாற்றிய காலத்தில் ஏழு கோடி டொலர் பெறுமதியான ரஷ்ய ஆயுதங்கள் கொள்வனவிற்கான ஒப்பந்தம் குறித்து பிரச்னை எழுந்துள்ளது. இதுசம்பந்தமான விசாரணைகள் இப்போது ஆரம்பமாகியுள்ளன.

இதுகுறித்து ஜெனரல் வனசிங்க பி. பி, சி. சிங்கள சேவை சந்தேசயாவுக்குத் தெரிவித்துள்ளதாவது.

முப்படைகளுக்குத் தேவையான ஆயுதங்களை ரஷ்யாவிலிருந்து கொள்வனவு செய்வதற்கு எமக்கு சந்தர்ப்பம்

(4ம் பக்கம் பார்க்க)

## வாகன பற்றறிகள் கொண்டுவர கட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

வடபகுதிக்கான வாகன பற்றறிகள் மீதான தடையை நீக்கியுள்ளதாக அரசு அறிவித்துள்ள போதிலும் தாண்டிக்குளத்தில் குறித்த பற்றறிகளை கொண்டுவர படை

(4ம் பக்கம் பார்க்க)

அரசியல் சீர்திருத்தம் குறித்து
## 19 கட்சிகளிடம் யோசனை பெறுவதற்கு ஏற்பாடு

(கொழும்பு)

அரசியல் சட்ட சீர்திருத்தம் குறித்து ஆராயவென நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற தெரிவுக்குழு நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் அங்கம் வகிக்கும் 13 சாட்சிகளின் யோசனைகளை வாய்மூலமாக பெற்றுக் கொள்ள இருக்கிறது.

இத் தெரிவுக்குழு மேற்படி சாட்சிகளை எதிர்வரும் 21-ம் திகதியிலிருந்து சந்திக்கத் தொடங்குகிறது. மார்ச் 10 ம் திகதி வரை சாட்சிகளிடம்

(4ம் பக்கம் பார்க்க)

## கிளாலி பூநகரி படகுசேவை

(யாழ்ப்பாணம்)

கிளாலிபூநகரிபடகுச்சேவை இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும் என விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

## முன்னாள் ஜனதிபதிகளின் சலுகைகள் குறைக்க முடிவு

(கொழும்பு)

ஒய்வுபெற்ற ஜனதிபதிகளுக்கு வழங்கப்பட்டுள்ள சலுகைகளை கட்டுப்படுத்துவதற்கு அரசு முடிவு செய்துள்ளது.

ஜனதிபதி பதவியிலிருந்து ஒய்வு பெற்றவர்கள் அரசியலமைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள சலுகைகளை விடக் கூடுதலான சலுகைகளையும், ஆடம்பர வசதிகளையும் பெற்றுள்ளனராம். இவற்றைக் குறைப்பதற்கே அரசு முடிவு செய்துள்ளது.

ஜனதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க இதற்கான முடிவை எடுத்துள்ளார்.

அனுமதிக்கப்பட்ட தொகையினை விட அரசு கூடுதலான வாகனங்களைப் பெற்று பல விதமான சலுகைகளையும்

(4ம் பக்கம் பார்க்க)

## "ஜே. ஆரே யுத்தத்தின் ஆரம்ப கர்த்தா"
– சந்திரிகா குற்றச்சாட்டு

(கொழும்பு)

முப்பதாயிரத்துக்கும் மேற்பட்டோரை பலிகொண்ட சிங்கள தமிழ் மக்களுக்கிடையிலான யுத்தத்தின் ஆரம்ப கர்த்த திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன ஆவார் என ஜனதிபதி சநதிரிகா குற்றஞ் சாட்டியுள்ளார்.

பத்து வருடம் ஆட்சியிலிருந்த ஜனதிபதி ஜே. ஆர். ஜெய

(4-ம் பக்கம் பார்க்க)

## விசேட கூட்டம்

(அரியாலை)

வடமராட்சி சுருக்கெழுத்து கழக மாணவர்கள், பழைய மாணவர்கள் உறுப்பினர்கள் பங்குபற்றும் விசேட கூட்டம் ஒன்று எதிர்வரும் 14ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் அல்வாய்சின்னத்தம்பி வித்தியாலயத்தில் நடைபெறும் 59

## பரிசளிப்பு விழா

[யாழ்ப்பாணம்[

சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக் கழகமும் சனசமூக நிலையத்தின் 38-வது ஆண்டு நிறைவு விழாவும், பரிசளிப்பு விழாவும் இம்மாதம் 13-ம் திகதி திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு சித்தன்கேணி மகா கணபதிப்பிள்ளையார் கோவில் வீதியில் நடைபெறவுள்ளது.

தலைவர் செல்வன் வே. பரந்தாமன் தலைமை வகிக்கிறார். பிரதம விருந்தினர்களாக பேராசிரியர் அ. சண்முகதாஸ் திருமதி மனோன்மணி சண்முகதாஸும் பங்குபற்றுகிறார்கள். [ம[

## மகப்பேற்று பரிசோதனை நிலையம்

(கொழும்புத்துறை)

கைதடி ஆயுள்வேத மருத்துவ மனையில் மகப்பேற்று பரிசோதனை நிலையம் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

இம் மகப்பேற்று நிலையத்தில் பிரதி வியாழக் கிழமை தோறும் காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரை மகப்பேற்றுப் பரிசோதனைகள் நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. -154

## கோழிகளுக்கு நோய்த்தடுப்பூசி

[உடுவில்]

சுன்னாகத்தில் இயங்கிவரும் தெல்லிப்பழை கால் நடை வைத்தியர் அலுவலகத்தில் கால் நடைகளுக்கான செயற்கைமுறை சினைப்படுத்தல், கால்நடைகள், கோழிகளுக்கான நோய் தடுப்பூசி போடுதல் ஆகியன நடைபெற்று வருகின்றன.

ஒவ்வொரு செவ்வாய்க்கிழமைகளிலும் ஒருமாதத்துக்குட்பட்ட கோழிக்குஞ்சுகளுக்கும் ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் மூன்று மாதத்துக்கு மேற்பட்ட கோழிக்குஞ்சுகளுக்கும் கொள்ளை நோய் தடுப்பூசி போடப்பட்டு வருகின்றது. (109)

## வீரவணக்க கூட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

கடற்புலிகளின் யாழ். மாவட்ட பிரதேசங்களில் மாசி மாதத்தில் வீரச்சாவு அடைந்த மாவீரர்களின் வீர வணக்கக் கூட்டங்கள் நடைபெறவுள்ளது.

இம்மாதம் 14-ம் திகதி செவ்வாய் பி. ப. 8-00 மணிக்கு வலிகாமம் கிழக்கு வடக்கு பாஷையூர் அந்தோனியார் ஆலய முன்றலிலும் 19-ம் தேதி ஞாயிறு பி. ப. 7-30 மணிக்கு வடமராட்சி கிழக்கு மாமுனை அ. மி. த. க. பாடசாலை அருகாமையிலும் 22-ம் தேதி புதன் பி. ப, 8-00 மணிக்கு வடமராட்சி வடக்கு பருத்தித்துறை கொட்டடி கடற்தொழில் சங்கம் அருகாமையிலும் (கடற்கரை வீதி) நடைபெறும்.

## பாதுகாப்புச் செயலர்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இராணுவத்தில் நான் 41 வது வருடகாலம் சேவையாற்றியுள்ளேன். ஓய்வுபெற்றதையடுத்து நான் எனது நிலங்களைக் கவனிப்பதிலும் விவசாயத்திலும் ஈடுபடுவதிலும் எனது காலத்தைக் கழிப்பேன் என ஜெனரல் ஹமில்டன் மேலும் தெரிவித்தார். இ

## திரிபோசா விநியோகம்

(நெல்லியடி)

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு சுமார் 2330 பைக்கற் திரிபோசா சத்துணவு கடந்த திங்களன்று வந்தடைந்துள்ளது,

இதேவேளை பருத்தித்துறை மாவட்ட அரசினர் மருத்துவ மனைக்கு சுமார் 380 பைக்கற் திரிபோஷாவும் இதே தினத்தில் வழங்கப்பட்டுள்ளன. (160)

## நேர்முகப் பரீட்சை

(நெல்லியடி)

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தால் அமைய சுத்திகரிப்புத் தொழிலாளர் பதவிக்கான நேர்முகப் பரீட்சையும், செயல் முறைப் பரீட்சையும் கடந்த வாரம் யாழ். பணிமனையிலும் தெல்லிப்பளை மாவட்ட வைத்திய சாலையிலும் (மானிப்பாய் வைத்தியசாலை) இடம்பெற்றது. ]160]

## மண்ணெண்ணை கொள்கலன் திருத்த வேலை

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திலுள்ள சகல மண்ணெண்ணை விற்பனை முகவர்கள் ஊடாகவும்பொது மக்களுக்கு தேவையான மண்ணெண்ணை விநியோகம் மேற் கொள்ளப்படவுள்ளதை தொடர்ந்து விற்பனை முகவர்களின் மண்ணெண்ணைக்கொள் கலன்கள் மற்றும் அதனோடு இணைந்த உபகரணங்கள் திருத்தி அமைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது 162

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995-02-11

சனி இரவு

08-01 தாயகப் பாடல்
08-05 நிகழ்வும் பகிர்வும்
08-20 நேயர் கடிதங்கள்
08-30 செய்திகள்
08-40 கவியரங்கம் — ''கண்ணிரண்டும் விற்று சித்திரம் வாங்கினால்...?
09-00 இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

1995-02-12

ஞாயிறு காலை

07-02 மாவீர வணக்கம்
07-15 களத்தில் மலர்ந்தவை
07-30 செய்திகள்
07-35 பத்திரிகைச் செய்திகள்
07-40 களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி
08-00 காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

1995-02-11

சனி மாலை

05-01 சிந்தனைச் சிதறல்
05-02 எழுச்சி கீதம்
05-10 புதியவை
05 15 வேங்கையின் நெஞ்சம்
05-30 அறிவியல் விஞடிவினப் போட்டி
06-00 சிந்தனைக்குச் சில விஞடிகள்
06-02 பாமாலை
06-15 என் தெரிவு
06-30 மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

# சிறுபான்மையினரின் அந்தஸ்துகள் பூரணமாக வழங்கப்பட வேண்டும்

(கொழும்பு)

தமிழர்களுக்கு முழுமையான உரிமைகளை வழங்கக் கூடிய அதிகாரப் பரவலாக்கல் அவசியமானதாகும். சிறுபான்மையினங்களுக்கு அவர்களுக்குரிய சகல அந்தஸ்தும் வழங்கப்பட வேண்டுமென உலக ஒத்துழைப்பு வழங்கும் மன்றம் தெரிவித்துள்ளது

இலங்கையின் அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பாக மேற்படி மன்றம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுளளதாவது: தமிழர்களுக்கு அவர்களின் சுயகௌரவத்தைக் காக்கக் கூடியதும் பயன்படக்கூடியதுமான ஒரு கட்டமைப்பு அவசியமாகும்.

சிறுபான்மையினங்களின் நியாயமான உரிமைகளை அரசியல் யாப்பில் உறுதிப்படுத்தப்பட வேண்டும் இதன்மூலம் நிரந்தரமான சமாதானத்தை ஏற்படுத்த முடியும்.

அரசியலமைப்பில் பெரும்பான்மை இனத்தவரதும் சிறுபான்மையினத்தவரதும் உரிமைகள் தெளிவாக வரையறுக்கப்பட வேண்டும்.

சாதாரண சிங்கள மக்கள் யுத்த வெறியர்கள் அல்ல ஏனைய இன மக்களின் நியாயமான உரிமைகளை அங்கீகரிப்பதை மறுக்கவில்லை

1983-ன்பின் ஏற்பட்ட கசப்பான அனுபவங்கள் இனவாதத் தலைவர்களை நம்பக் கூடாது என்ற கசப்பான அனுபவங்களே சிங்களஇன மததியில் தோன்றியுள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளது. க-சி

## பொயபுராண விரிவுரை நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கோணவளை அருள்மிகு ஞானவைரவர் தேவஸ்தானத்தின் அலங்கார மஹோற்சவத் திருவிழாத் தினங்களில் தொடர்ந்து 10 தினங்கள் இடம் பெற்ற 'பெரியபுராணத் தெய்வீகப் பேருரைகள்' இன்று நிறைவு பெறுகின்றன.

இத்தொடர் விரிவுரையை நிகழ்த்திய தமிழருவி த. சிவகுமாரன் விழா முடிவில் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளார்.

## தபால்களைப் போடவும்

(அரியாலை)

வெளியூர்களுக்கான தபால்களை இன்று சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு முன்பதாக யாழ் பிரதம தபால் அலுவலகம் முன்பாகவுள்ள தபால்பெட்டியில் போடுமாறு பிரதம தபால் அதிபர் திரு. கோடீஸ்வரன் அறிவித்துள்ளார் 59

## இன்று

(கொழும்புத்துறை)

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோவிலின் மாதாந்த ஏகதாசிஅபிஷேகம் விசேட பூசை வழிபாடுகள் இன்று சனிக்கிழம மாலை 3 மணிக்கு இடம்பெறும்' 154

0 0

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை திருஞான சம்பந்த வித்தியாசாலை ஆரம்பப் பிரிவு இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2-00 மணியளவில் விதயாலய அதிபர் வி· சிவஞானபோதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

0 0

(அரியாலை)

யாழ்- கோவில் வீதி புனித லூர்த்து அன்னை கெபியில் பருத்தித்துறை தும்பளைபுனித லூர்த்துஅன்னை ஆலயத்திலும் இன்று அன்னையின் திருவிழா நடைபெறுகின்றது. 59

0 0

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை கிழக்கு ஆத்தியாம்பதி ஸ்ரீ சந்திரசேகர விநாயகர் கோவிலின் வருடாந்த உற்சவ 5 ஆம் திருவிழாவான இன்று சனிக்கிழமை மாலை 9மணிக்கு மஞ்சத்திருவிழா இடம்பெறும் மாலை 7.00 மணிக்கு ஆசிரியர் திரு. க. ஆனந்தராசாவினால் '' கணபதி மகிமை'' என்ற தலைப்பில் தெய்வீக இசைச் சொற்பொழிவு நடைபெறும் 154

# யாழ். நகரில் முத்திரைக்கு தட்டுப்பாடு

(மானிப்பாய்)

யாழ். நகரிலுள்ள தபாலகங்களில் முத்திரைக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

சில தபாலகங்களில் 2 ரூபா 1 ரூபா முத்திரைகள் மாத்திரமே மக்களுக்கு விநியோகம் செய்யப்படுகின்றது. இதனால் பிறப்பு, இறப்பு, கல்யாண அத்தாட்சிப் பத்திரங்களைப் பெறுவதற்கு விண்ணப்பம் செய்வோரும் வெளிநாடுகளுக்கு தபால்களை அனுப்புபவர்களும் பல சிரமங்களை எதிர் நோக்குவதாகத் தெரிவிக்கப் படுகிறது. 71-சி

# பாடசாலையில் படையினர் மரத்தின் கீழ் மாணவர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இரண்டாந்தரப் பாடசாலயாக விளங்கும் மொறக்கொட்டாஞ்சேனை இராமகிருஷ்ணமிஷன் அ. த. க. வித்தியாலயம் கடந்த 90 ம்ஆண்டிலிருந்து திறந்த வெளியில் மர நிகழ்களின் கீழும் உடைந்த கட்டிடங்களிலும் இயங்கி வருகின்றது,

இருபது ஆசிரியர்களைக் கொண்ட இவ்வித்தியாலயம் சுமார் 1000 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். ஆண்டு 1 முதல் க. பொ. த. சாதாரணம்வரையும் 25வகுப்புகள் உள்ளன.

வாழைச்சேனை பிரதான வீதியிலுள்ள உடைந்ததும் வசதியில்லாததுமான தனியார் வீடுகளிலும் மரநிழலிலும் இப்பாடசாலை இயங்குகிறது.

படையினர் மையம் கொண்டுள்ள இப்பாடசாலையின் நிரந்தரக் கட்டிடத்தை திரும்பப் பெற பொறுப்பு வாய்ந்த சகலரும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இப் பகுதி வாழ் பெற்றோர் கேட்டுள்ளனர் -71

### தமிழீழ கல்விக்கழக தேர்வு

# பரிசுகள் பெறும் மேலும் சில மாணவர்கள்

[யாழ்ப்பாணம்[

தமிழீழ கல்விக் கழகத்தால் நடத்தப்பட்ட தமிழீழ முதனிலை, இடைநிலை, பொதுக் கல்வித் தேர்வுகளில் சிறப்பாகச் சித்தியெய்தி பரிசு பெறவுள்ள மேலும் சில மாணவர்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

முன்னர் வெளியிடப்பட்ட பட்டியலில் இவர்களின் விபரம் தவறுதலாக இடம்பெறவில்லை.

முதனிலைத் தேர்வு தேசிய மட்டம்: அனுஷா அற்புதராசா-உடுவில் மகளிர்கல்லூரி கௌசிகா மகாதேவா - இந்து மகளிர் ஆரம்ப பா'

நல்லூர் கோட்டம்: ஜெகதாரினி கனகலிங்கம் - இந்து மகளிர் ஆரம்ப பா. யோ. சஞ்சீர் - கொக்குவில் இந்து ஆரம்ப பா.

உடுவில் கோட்டம்: கிரிஷாந்தி மகேந்திரன் - உடுவில் மகளிர் கல்லூரி, திவ்யா கனக சபேசன் - உடுவில் மகளிர் கல்லூரி.

சண்டிலிப்பாய்க் கோட்டம்: நளினி சங்கரநாதன் - சுதுமலை சிந்மய பாரதி வி.

கரவெட்டிக் கோட்டம்: பிரியதர்சினி இராதாகிருஷ்ணன் - நெல்லியடி மெ. மி. த. க. பா.

முதனிலைத் தேர்வு தேசிய மட்டம் ஆங்கிலப்பாடம்: இரத்தினம் சியாமளன் - மகாஜனக் கல்லூரி, இ. சோபர்ஞ-சரணவாய் பொன்னம்பலவி, பிரியதர்சினி இராதாகிருஷ்ணன் - நெல்லியடி மெ. மி. த. க பா., சிந்துஜா ஜெயபாலசிங்கம் - இந்து மகளிர் ஆரம்ப பா., மதுரா இராகவன் -உடுவில் மகளிர் கல்லூரி அனைவரும் முதலாமிடம்.

இளநிலைத் தேர்வு: மருதங்கேணிக் கோட்டம் பாடசாலை பெயர் மாற்றம்- மேரிறெசில்டா சந்தியோகு - செம்பி

(4-ம் பக்கம் பார்க்க)

# மாணவருக்கு அப்பியாச புத்தகங்கள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

பளை கலவிக்கோட்டத்திற்குட்பட்ட மாசார் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, சோரன்பற்று கணேசா வித்தியாசாலை மாணவர்களுக்கு தாளையடி பங்குத்தந்தை அருட்திரு எம். எக்ஸ். கனகரத்தினம் அடிகளார் அப்பியாசப் புத்தகங்களை வழங்கியுள்ளார்.

யாழ். மாவட்ட கியூடெக் நிறுவனத்தின் உதவியுடன் வழங்கப்பட்ட அப்பியாசப் புத்தகங்களை மாசார் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் 150 மாணவர்களும் சோரன்பற்று கணேசா வித்தியாலயத்தில் 75 மாணவர்களும் இலவசமாகப் பெற்றனர்.

இதற்கு முன்னர் தாளையடி பங்குத்தந்தையால் மாசார் த. க. பாடசாலை மாணவர்களுக்கு சீருடைக்கான துணிகளும் வழங்கப்பட்டன. —163

### மணிவாக்கு

ஐம்புலன்களை வென்றவன் வீரமே வீரம். கடவுள் ஒன்றெனத் தெரிந்த பேரறிவே அறிவு. பிறர் ஏவாமல் உண்பதே ஊண். தான் சாகாமல் கற்பதே கல்வி.

- ஞானக்கோவை

## நமது நோக்கு

### அன்பர்கள் ஆசியோடு...!

கொழும்புக்கு வெளியே ஆரம்பிக்கப்பட்ட முதல் தினசரிப் பத்திரிகை என்ற பெருமையோடு, தமிழ் மக்களின் அரசியல், கல்வி, பொருண்மிய, ஆன்மீக விழிப்புணர்ச்சியை ஊட்ட வேண்டுமென்ற கொள்கையோடு, 'ஈழநாடு' சென்ற பல ஆண்டுகளாக வெளிவந்து கொண்டிருக்கின்றது.

ஒரு சமூகத்தைப் பிறர் அடிமையாக்கி, அடக்கி ஒடுக்கிவிடலாம் என எண்ணிச் செயற்படுவதற்கான காரணம் என்ன?

அந்தச் சமூகம் - தனது பிறப்புரிமைகளை உணராது, தனது அறிவாற்றலை வளர்த்து அதன் மூலம் தனது பொருண்மிய வளத்தைக் கட்டிக் காக்கும் கடமையை உணராது இருக்கும் நிலையே!

எனவே - சமூகத்தின் விழிப்புணர்ச்சி வளர்க்கப்பட வேண்டும்; தனது உரிமைகளை, கடமைகளை உணர்ந்து தலை நிமிர்ந்து நிற்க ஊக்குவிக்க வேண்டும்.

இதற்கு உதவும் சாதனங்களில் ஒன்றுதான் பத்திரிகையல்லவா?

ஐரோப்பிய நாடுகளுக்கு அடிமையாக இருந்த போது, பல தீமைகள் விளைந்தாலும் இங்கு வந்திறங்கிய நன்மைகளில் ஒன்று அச்சுச் சாதனம்.

முதலில் அதனைச் சமயப் பிரசாரத்திற்குப் பயன்படுத்தினாலும், சமூகம் முழுவதற்குமான பத்திரிகைத் துறைக்கு அச்சாதனம் பேருதவி புரிந்து வந்ததை நாம் மறக்க முடியுமா?

மக்களுக்குத் தேவையான அரசியல் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவும், அறிவாற்றலை வளர்த்தெடுக்கவும் மக்கள் உடல்நலம் பேணி உழைக்கும் சக்தியைப் பெருக்கவும், பொருண்மிய நுட்பங்களை அறிந்து, வேளாண்துறை போன்ற பல்வேறு துறைகளைச் சீராக வளர்க்கவும், தமிழ் இலக்கியச் சுவையைப் பேணிக் காத்திடவும் 'ஈழநாடு' சேவையாற்றி வந்துள்ளது.

அத்தோடு - மக்களின் ஆன்மீக வாழ்வுக்கான சமயச் செயற்பாடுகளை ஊக்குவிக்கவும் தவறவில்லை.

சங்கடங்கள் பல வந்தாலும் சரிந்து போகாது, அன்பர்களின் ஆசி உண்டு என்ற நம்பிக்கையோடு நிமிர்ந்து நடைபோடுகிறது 'ஈழநாடு'!

காடு வளர்ப்பு
நாடு செழிப்பு

### இன்று 'ஈழநாடு' இதழின 36 ஆண்டு நிறைவு:

# மக்கள் பணியில் 36 ஆண்டுகள் பூர்த்தி

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தின் ஆரம்பகால கட்டத்தில் தமிழ் மக்களின் குரலாக எழுந்த ''ஈழநாடு'' பத்திரிகை, தான் கொண்ட கொள்கை வழி நின்று, இலட்சியத்தில் பிறழாது இன்று 37வது அகவையில் காலடி எடுத்து வைக்கின்றது.

கடந்த 36 வருடங்களாகத் தமிழ் மக்களோடு பின்னிப் பிணைந்து, இயன்ற வரையில் அவர்களின் துன்பதுயரங்களில் கை கோர்த்து நின்று பணி ஆற்றி வந்திருக்கிறது.

11-02-59ல் வார இதழாக ஆரம்பமாகிப் பின்பு பலரின் வேண்டுகோளுக்கு இணங்க 11-02-60ல் இருந்து வாரம் இருமுறை வெளியிடப்பட்டு, 11-02-61 முதல் தினசரியாகப் பரிணமித்து இன்று வரை தினசரிப் பத்திரிகையாகப் வெளிவந்து கொண்டிருகிறது.

ஒவ்வொரு பிரசுரத்தின் போதும் நாம் அனுபவிக்கும் பிரசுர வேதனையும, அடுத்த நாள் பத்திரிகையைக் கையில் எடுத்து வாசிப்பதில் நாம் அடையும் மகிழ்ச்சியும், ஒரு குழந்தையைப் பிரசவித்த பின்னர் தாயார் அடையும் மகிழ்ச்சிக்குச் சமமாகும்.

1959ம் ஆண்டில் அமரர் பெரியார் கே. ஸி. தங்கராசா அவர்களினால் ''ஈழநாடு'' ஆரம்பிக்கப்பட்டது அன்று தொடக்கம் இன்று வரையும் தமிழ்கூறும் நல்லுலகில் தனக்கென ஒரு தனியிடத்தை வகித்து ''ஈழநாடு'' திகழ்கின்றது.

கடந்த 36 ஆண்டுகளுக்குள் ''ஈழநாடு'' சந்தித்த சோதனைகள்; வேதனைகள் ஏராளம்.

நாம் நடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்த்தால், இன்று வரையும் நாம் செயற்பட்டுக்கொண்டு இருப்பதே ஓர் இமாலயச் சாதனை தான். ''ஈழநாடு'' பத்திரிகையின் முதல் பிரதி வெளியான போது யோகர் சுவாமிகளிடம் கையளிக்கப்பட்டது. முதல் பிரதியைக் கையில் எடுத்துப் பார்த்த அவர், ''நன்றாக இருக்கிறது. நன்றாக வளரும். ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம். உண்மையை எழுதுங்கள், உண்மையாய் எழுதுங்கள்'' என்று ஆசி வழங்கினர்கள்.

யோகர் சுவாமிகளின் ஆசியினால் எமது நிறுவனம் புயலுக்கும், பூகம்பத்திற்கும், பெரும் சூறாவளிகளுக்கெல்லாம் முகம் கொடுத்து இன்று நிமிர்ந்து நிற்கின்றது.

துரை

பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள் பலரை உருவாக்கிய பெருமை ''ஈழநாடு''வையே சாரும். ''ஈழநாடு'வில் பணி புரிந்த பலர் இன்று பல இடங்களில் பத்திரிகைத் தொழிலில் சிறந்து விளங்குவதைக் காணலாம்.

ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் இன்று தமிழ்ப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் வெளிவருவதைக் காண்கிறோம். அவற்றில் பெரும்பாலானவற்றில் ''ஈழநாடு''வில் இருந்து உருவானவர்களே முக்கிய பாத்திரம் வகிக்கின்றனர். 'பாரிஸ் ஈழநாடு'', 'தமிழன்' 'ஈழகேசரி', 'நாழிகை', 'தமிழர் தகவல்', 'பூம்பொய்கை' போன்றவற்றை உதாரணமாக் குறிப்பிடலாம்.

''ஈழநாடு''வின் முதல் பிரதியில் ஸ்தாபகர் அமரர் கே. ஸி. தங்கராசா அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் ஆழமானவை மட்டுமன்றித் தீர்க்க தரிசனம் மிக்கவை என்பதனை இங்கு குறிப்பிட்டே ஆகவேண்டும்.

சிக்கல்கள் மிகுந்துள்ள இன்றைய நிலையில், எத்திக்கை நோக்கிச் செல்ல வேண்டும் என்று தெரியாது தமிழ் பேசும் மக்கள் திகைக்கின்ற இவ்வேளையில் உண்மை தெய்வீகமானது. கருத்துரைகள் கட்டுப்பாடற்றவை என்ற பத்திரிகைத் தர்மத்தை இலக்குகளாகக் கொண்டு, உள்ளதை உள்ளவாறு எடுத்துரைப்பதற்கு ''ஈழநாடு'' உதயமாகின்றது என்றும், தமிழ் மக்கள் புத்தம் புதிய துறைகளை ஆராய்ந்து, தமது பொருளாதார நிலையைச் சீராக்க வழிவகைகளைத் தேட வேண்டும் என்றும் அமரர் கே. ஸி. தங்கராசா அவர்கள் அன்று எழுதியிருந்தார்.

அவருடைய கருத்துக்களின் தாற்பரியத்தை நாம் பல தடவைகள் உணரக்கூடியதாக இருந்தது.

''ஈழநாடு''வுக்கென ஒரு வரலாற்றுப் பாரம்பரியம் இருந்தாலும், கடந்த பத்து வருட காலத்திற்கு மேலாக ஈழநாடு ஆண்டு நிறைவு, போராட்டச் சூழ்நிலையிலேயே இடம்பெற்று வந்தது. இம்முறை சமாதானச்சூழ்நிலையில் 37வது அகவையில காலடி எடுத்து வைப்பதால் அதற்கு ஒளிமயமான எதிர்காலம் உண்டு என்ற நம்பிக்கையைத் தோற்றுவிக்கிறது.

ஒரு பத்திரிகைக்குத் தேவையான தொலைத் தொடர்புச் சாதனம் மற்றும் பல வசதிகளற்ற நிலையில் ''ஈழநாடு,' நிறுவனம் இன்று ஊழியர்களின் மிகுந்த ஒத்துழைப்பினாலும், தமிழ் மககளின் ஆதரவினாலும், இறைவனின் திருவருளினாலும் செயற்பட்டுக்கொண்டிருக்கிறது.

## இராசி பலன்

11-02-1995

சனிக்கிழமை

(தமிழுக்கு தை 28)

ஏகாதசி பி. ப. 3-21 வரை, மிருகசீரிடம் காலை 7-57 வரை, சித்தாமிர்தயோகம் இராகுகாலம், காலை 9-34 முதல் 11-04 வரை, சுபவேளை மாலை 3-34 முதல் 5-04வரை.

மேஷம்: தொழில் உற்சாகம், கற்றோர் மதிப்பு, பாராட்டு.

இடபம்: மனச்சோர்வு, கடமை தவறல், அலைச்சல்.

மிதுனம்: மனை சிறப்பு, வாக்கு வசீகரம், தியாகம்.

கடகம்: விருந்தினர் பெருமை, காரியசித்தி, கலகலப்பு.

சிங்கம்: விரோதியை ஜெயித்தல், மன தியானம், பணவரவு.

கன்னி: இனசன உதவி, தாயார் பாசம், பயணம்.

துலாம்: தொழில் நஷ்டம், மனப்பயம், பயனற்ற பேச்சு.

விருச்சிகம்: மனச்சங்கடம், அவமரியாதை, வேதனை.

தனுசு: பிழையை ஏற்றல், நண்பர் சகாயம், பணிவிடை.

மகரம்: குடும்ப சிறப்பு, வெளியூர் தகவல், தெய்வீக செலவு.

கும்பம்: தொழில் கஷ்டம், பணமுடை, சினம் கொள்ளல்.

மீனம்: உறவினர் சங்கடம், அமைதிக்குறைவு, ஏமாற்றம்.

ஜோஸ்யர்

## பலதும் பத்தும்

### குறட்டை

சிங்கத்தின் உறுமல் - யானையின் பிளிறல் - வேட்டை நாயின் குரைப்பு - லயத்துடன் கூடிய இசை - இப்படிப் பல்வேறு வடிவங்களில் குறட்டை ஒலி அமையும். இது தீங்கற்றது எனச் சிலர் கூறினாலும், ஒரு அடிப்படை நோயின் வெளிப்பாடே!

மூச்சு வழிப் பாதையின் அடைப்பால், நுரையீரல் மிகுந்த பலத்துடன் காற்றை உள்ளிழுக்கும். அப்போது அண்ணம் அதிர்வதால் ஏற்படும் சத்தமே குறட்டை.

கொழுத்த உடல், வீங்கிய டான்சில்கள், ஊனமுற்ற மூக்கு, மிகையான புகைத்தல், மது, உணவில் அதிகமான உப்பு ஆகியவை மூச்சுப் பாதையின் சிலேட்டுமப் படலத்தை வீங்கச் செய்யுமாம்... அதனால்... குறட்டை! மேற்கு நாடுகளில் ''தூக்க ஆய்வகங்களில'' (Sleep Laboratories) சிகிச்சைபெறலாமாம்!

— மயூரன்

### ''ஈழநாடு நீடு வாழ்கவே''

பல்லவி

ஈழநாடு வாழ்க வாழ்கவே—எங்கள்
ஈழநாடு நீடு வாழ்கவே—என்றும்
(ஈழ)

அனுபல்லவி

உலகம் போற்றும் யாழ்நகரிலே—இந்த
உலகம் ஏற்கும் வளங்களோங்கவே—எங்கள்
(ஈழ)

சரணம்

நாட்டுள் நடக்கும் செய்தி வழங்குவாய்—பிற
நாட்டில் கிடைக்கும் செய்தி முழங்குவாய்--நீதிக்
கோட்டில் நடக்கும் செய்தி வழங்குவாய்—நடு
ரோட்டில் கிடைக்கும் செய்தி முழங்குவாய்—எங்கள்
(ஈழ)

உண்மைகளைத் தெளிந்து சொல்லுவாய்—எதையும்
உண்மையாகத் துணிந்து சொல்லுவாய்—எங்கும்
உண்மையோடு இணைந்து சொல்லுவாய்—என்றும்
உண்மைக்காகத் துணிந்து சொல்லுவாய்—மண்ணில்
(ஈழ)

உரிமை கொண்டு நெறிகள் காட்டுவாய்—அன்பு
உரிமை பூண்டு அறிவும் ஊட்டுவாய்--தமிழ்
உரிமை கோரிக் குரல் கொடுக்கிறாய்--எம்
உரிமைப் போரில் கரம் தொடுக்கிறாய்- என்றும்
(ஈழ)

வாழ்க வாழ்க என்று வாழ்த்துவோம்--நலம்
சூழ்க சூழ்க என்று வாழ்த்துவோம்--பணி
வளர்க வளர்க என்று வாழ்த்துவோம்--புகழ்
ஒளிர்க ஒளிர்க என்று வாழ்த்துவோம்--எங்கள்
(ஈழ)

--'முருகு'

★

### வாழிய பன்னூறாண்டு

எத்திக் கும்வியந்து போற்றும்
இன்தமிழ்ச் சொல்லில் நல்ல
தித்திக் கும்செய்தி நாளும்
திரட்டியே தந்து இன்று
முப்பத் தியாறு ஆண்டு
முகிழ்ந்துநல் லகவை காணும்
இப்பத் திரிகை என்றும்
எழிலுற வாழ்வ தாக!

ஆழிசூழ் உலகில் உள்ள
அளவிலாப் புதினந் தன்னைக்
கேளெனச் சொல்லிக் காலை
கிட்டியே வந்து தினத்
தாளுக்குள் அடக்கி வைத்துத்
தந்திடும் ஈழ நாடு
வாழிய பன்னூ றாண்டு
வாழ்த்தினேன தமிழால் இன்று

——நாயன்மார்கட்டு இ. குகதாசன்

★

### ஈழநாடே வாழி பல்லாண்டு!

மக்களின் நலமே நோக்கி
முப்பத்துஆறு ஆண்டாய்
பக்கமென் றெதுவும் சாராக்
கொள்கையில் உறுதி கொண்டு
திக்கெலாம் நிகழும் செய்தி
திறமுடன் தொகுத்துத் தந்தெம்
மக்களின உள்ளம் வென்ற
மகத்துவ ஏடே வாழிவாழி!

காலம் வென்ற ஞானி யோகரின்
காத்திரமான ஆசியும் கொண்டு
ஞாலம் முழுதும் நிகழும் நிகழ்வுகள்
நடுவு நிலையில் நின்று வழங்கி
பாலம் எனவே திகழ்ந்து எங்களின்
பெருமைகள் பரவப் பணிசெய்கின்ற
சீலம் மிகவுடை ஈழநாடே
சிறப்புடன் வாழி பல்லாண்டே நீ!

—நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்

★

### வாழிய ஈழநாடே!

ஆண்டு பல நீ வாழ்ந்து
ஆதி சிவன் மொழி வளர்த்து
ஆர்வமுடன் பணிசெய்தே
ஆற்றிடுவாய் ஈழநாடே!

—வண்ணை சே. சிவராஜா

# போராளிகள் தாயகம் திரும்ப தமிழக அரசு அனுமதி மறுப்பு

[சென்னை]

தமிழகத்தில் சிறப்பு முகாம்களிலுள்ள விடுதலைப் புலிகள் அல்லது போராளிகள் எவரும் இலங்கை திரும்ப அனுமதிக்கப்படமாட்டார்கள் என தமிழக வருவாய்த்துறை நிர்வாக ஆணையர் திரு எம். இரகுபதி தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்; வழக்குகள் முடிந்தபின்னரே இவர்கள் திரும்பமுடியும் என்றும் விஸா மற்றும் கடவுச்சீட்டுக்கள் இன்றித் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இலங்கை அகதிகளும தாயகம் திரும்பலாம் என்றும் தெரிவித்தார்.

இதேவேளையில் இம்மாதம் 27-ம் திகதியளவில் தமிழகத்திலிருந்து 1387 இலங்கைத் தமிழ் அகதிகள் தாயகம் திரும்ப இருப்பதாகவும் இதறகாக இரு கப்பல்கள் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

போராளிகளை தமிழக அரசு இலங்கைக்கு திருப்பி அனுப்பப்போவதாக கூறுவது தவறு என்றும் அகதி முகாம்கள் பற்றி மனித உரிமை அமைப்புக்களிடமிருந்து தகவல் எதுவும் வரவில்லை என்றும் தெரிவித்தார். [-க-ரி]

## இடது சாரி கட்சிகளை கூட்டணி சந்திப்பு

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணி அரசியல் சட்ட சீர்திருத்த விடயத்தில் தனது யோசனையை தெரிவிப்பதற்கு முன்னதாக இடதுசாரிக் கட்சிகளை கூட்டாக சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவிருக்கிறது

எதிர்வரும் 15ம் திகதி இதறகான மாநாடு ஒன்று கூட்டணியினல் ஏற்பாடுசெய்யப்பட்டிருக்கிறது. இதன் பின்னர் மூஸ்லிம் காங்கிரஸ், ஐ. ஐ. தே. முன்னணி, சுதந்திரக்கட்சி ஆகியவற்றுடனும் கலந்து பேச கூட்டணி திட்டமிட்டிருக்கிறது. -ரி

# "வட-கிழக்கு யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும்"

– தென்மாகாண ஆளுநர் நெவில் கனகரட்ண –

(கொழும்பு)

ஒரு தசாப்தத்திற்கு மேல் வடக்கு கிழக்கு பகுதிகளில் நீடித்து வரும் யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு இனப்பிரச்னைக்கு சமாதான தீர்வு காண்பது இன்றியமையாதது என்று தென்மாகாண ஆளுநர் கலாநிதி நெவில் கனகரட்ண தெரிவித்துள்ளார்.

காலியில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு கூறினர்.

இலங்கையின் சுதந்திரப் போராட்டத்திற்கு பெரும் பான்மைசமூகத்தைச் சேர்நத தலைவர்கள் மாத்திரமன்றி சேர். பொன். இராமநாதன், சோ. பொன். அருணாசலம் போன்ற தமிழ் தலைவகளும் முன்னின்று உழைத்துள்ளார்கள். நாம் பெற்ற சுதந்திரத்தை அர்த்தமுடையதாக்க செய்ய வேண்டுமாயின்வடக்கு கிழக்கு யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு இனப் பிரச்னைக்கு சமாதான தீர்வு காண்பது அவசியமாகும் என்றும் அவர் கூறினர். (ரி]

## கொழும்பு செல்லும் நோயாளர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

விசேட வைத்திய சிகிச்சை பெறுவதற்காக கொழும்பு செல்வதற்கு, வைத்திய நிபுணர்களால் சிபார்சு செய்யப்பட்ட நோயாளிகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தால் ஒழுங்கு செய்யப்படும் கப்பல் பிரயாணத்திற்குப் பதிவு செய்வதற்காக, அடையாள அட்டை, மற்றும் ஆவணங்களுடன் யாழ். பொது வைத்தியசாலைப் பணிப்பாளர் பணிமனையில நாளை 12-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு சமுகமளிக்குமாறு கேட்கப்படுகிறார்கள். (ரி)

## க, பொ. த. [உ/த] பரீட்சை விண்ணப்பம்

(கொழும்பு)

இவ் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடைபெறவிருக்கும் க. பொ. த. உயர்தர பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மார்ச் 31-ம் திகதிக்கு முன் பரீட்சைக்கு விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. -ரி

# விட்டமின் உட்கொண்ட 32 மாணவர்கள் மயக்கம்

(சென்னை)

விற்றமின் குளிகைகளை உட்கொண்ட 32 மாணவர்கள் உடன் மயக்க நிலையை அடைந்ததையடுத்து அவர்கள் அரசு மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு தூத்துக்குடியில் உள்ள பாடசாலையில் கல்வி பயிலும் 6-ம் வகுப்பு முதல் 8-ம் வகுப்பு வரையுள்ள மாணவர்களே இவ்வாறு மருத்துவ மனைகளில் சேர்க்கப்பட்டனர்.

வைத்திய பரிசோதனையை அடுத்தே இவர்களுக்கு விற்றமின் மாத்திரைகள் வழங்கப்பட்டதாகவும் ஆனல் இச்சம்பவம் குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தமிழக பொலிஸ் அறிக்கைகள் தெரிவித்துள்ளன.

இதேவேளையில் கோயம்புத்தூரில் பெண்கள் கல்லூரி ஒன்றில் வைட்டமின் டொனிக் அருந்திய 84 மாணவிகள் வயிற்றில் எரிச்சல் ஏற்பட்டதையடுத்து முதலுதவிச் சிகிச்சை அளிக்கப்பட்டது. -க-ரி

### உண்வுப்பொருள் எடுத்துவருவதற்கு

# 'லங்காமொனிற்றர்' புதிய கப்பல் சேவை

(கொழும்பு)

யாழ்ப்பாணத்துக்கு உணவு மற்றும் அத்தியாவசிய பொருட்களை அனுப்பிவைப்பதற்கு 'லங்கா மொனிற்றர்' என்ற புதிய கப்பல் ஒன்றை புனர்வாழ்வு அமைச்சு வாடகைக்கு அமர்த்தவுள்ளது.

லங்கா மொனிற்றர் கப்பல் கொழும்பில் மொத்தம் 2:900 மெ. தொன் உணவுப் பொருட்களை ஏற்றிக்கொண்டு அடுத்த வாரம் பருத்தித் துறைக்கு புறப்பட்டுச் செல்லும்.

இதே வேளை கோமாரி என்ற கப்பல் 3,200 தொன் உணவுப் பொருட்களை ஏற்றிக்கொண்டு இரண்டொரு தினங்களில்பருத்தித்துறைக்கு புறப்படவுள்ளது. -ரி

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி. 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office SriLanka under Licence Number B/16336/8-

### பாதுகாப்புக்கு

(1-ம பக்கத் தொடர்ச்சி)

காப்புக்கென அதிக தொகை ஒதுக்கப்பட வேண்டியதில்லை. படை நடவடிக்கைகள் இடம் பெருவிட்டால சிறிலங்காவின் பாதுகாப்புச் செலவில் 1,300 கோடி ரூபா மீதமாகும் எனத் தெரிவிககப்படுகின்றது.

இந்த நிலையில் பிரதி நிதி அமைச்சர் ஜி. எல். பீரிஸின் கூற்று முரணனதாக உள்ளதென தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்புக்கென அதிக பணம் ஒதுக்கப்படுவது அரசு தொடர்ந்து போரை நடாத்துவதற்காக என நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கேள்வி எழுப்பியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. -ரி

### முன்னுள்

1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவும், திருமதி பிரேமதாசாவும் இப்போதும் பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

அரசியலமைப்புச் சட்டத்திள்படி ஒய்வு பெற்ற ஜனதிபதி ஒருவருக்கு வாசஸ்தலம் ஒன்றுடன் சொகுசு ஆடம்பரக் கார் ஒன்றும், கபினட் அமைச்சர் ஒருவருக்கு வழங்கப்படும் பாதுகாப்பு சேவையும் அவருக்கு வழங்கப்படும்.

பொலிஸ் அதிகாரி ஒருவரும், ஐந்து பொலிசாரும் அடங்கிய குழு ஒன்று அவருக்கு பாதுகாப்பு சேவையை வழங்கும். (இ-ரி)

### ஜே, ஆரே

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வர்த்தன தமது தாயாரான திருமதிசிறிமாவோ பண்டாரநாயக்காவில் குடியுரிமையைக் கூட பறித்து விட்டார் என ஜனதிபதி சந்திரிகா குற்றஞ் சாட்டியுள்ளார்.

வெளிநாட்டு பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார். (இ-ரி)

### தமிழீழ

[2ம் பக்கத் தொடர்ச்சி]

யன்பற்றுரே' க. த. க. பா. காயத்திரி சபாரத்தினம்- உடுத்துறை ம. வி.

பொதுக் கல்வித் தேர்வு:

ஆங்கிலம்: பக்தகௌரி செல்வரட்ணம் யாழ்' இந்து மகளிர் கல்லூரி.

சமூகக் கல்வி: நவரத்தினம் மேகஸ்வரன் யா/இந்துக் கல்லூரி, [சி]

### அரசியல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி

இருந்து வாய்மூலம் யோசனைகள் பெறப்படவுள்ளன.

இதுதொடர்பாக இச்சாட்சிகளுக்கு தனித்தனியான அழைப்புகள் அனுப்பப்பட்டுள்ளன. -ரி

### வாகன

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யினர் பல கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர்.

வாகன அனுமதிப்பத்திரங்களை வைத்திருப்பின் மட்டும் ஒரு பற்றறி கொண்டுவர படையினர் அனுமதி வழங்குகின்றனர்,

அத்துடன் புதிதாக பற்றறிகளை கொண்டு செல்லமுடியாது என்றும் அமிலம் நிரம்பிய பற்றறிகளை கொண்டு செல்லவே அனுமதிக்கப்படும் என்றும் படையினர் கூறுகின்றனர்.

நீண்டகாலமாக வடபகுதியில் சிறிலங்கா அரசின்வாகன அனுமதி பத்திரம் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ரி

### அரசு புலிகளுடன்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ராக இருக்கிறது என்றும் அவர் கூறினர்.

திரு. லஷ்மன் கதிர்காமர் மேலும் அங்கு கூறியதாவது:

அரசு விடுதலைப்புலிகளுடன் பேசுவதற்கு எப்போதுமே தயாராக இருக்கிறது. இன்று பேசுவதற்குக் கூட அரசு தயாராகவுள்ளது. ஆனல் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க சில முட்டுக்கட்டைகள் தடையாக உள்ளன. பேச்சுவார்த்தைக்கான திகதி பற்றி முடிவு எடுக்க முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் தலைவர்கள் கண்காணிப்புக்குழு தலைவர்களை சந்தித்துத்துப்பேசியுள்ளனர். இது வரவேற்கத்தக்க மாற்றம். இதனல் இரு பகுதியினருக்குமிடையில் நல்ல சூழ்நிலை என்று ஏற்பட்டுள்ளது

அதிகாரப் பரவலாக்களின் போது கூடியபட்ச அதிகாரங்களை வழங்க அரசு முடிவுசெய்துள்ளது. அரசு இப்போது விடுதலைப்புலிகளுடன் தொடர் ஏற்படுத்திக்கொண்டு பலவிடயங்கள் குறித்தும் ஆராய்ந்து வருகிறது என்றார். இ-ரி

### மன்னிப்புச்சபை

(1ம் பககத் தொடர்ச்சி)

போன சம்பவம் மற்றும் சட்டவிரோத மரணதண்டனைகள் பற்றி விசாரித்து வரும் புதிதாக நிறுவப்பட்டுள்ள விசாரணை ஆணைக்குழுக்களின் அங்கத்தவர்களையும் சந்திக்க உத்தேசித்துள்ளது.

முன்னைய அரசாங்கம் நிறுவிய ஆட்கள் பலவந்தமாக கடத்திச் செல்லப்பட்டமை பற்றி விசாரிக்கும் ஜனதிபதி ஆணைக்குழு மனிதஉரிமைகள் செயலணி ஆகியவற்றின் அங்கத்தவர்களையும் சர்வதேச மன்னிப்பு சபையின் தூதுக்குழுவினர் சந்திப்பதற்கு திட்டமிட்டுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், வழக்கறிஞர் சங்க உறுப்பினர்கள். உள்ளூர் மனித உரிமைக் குழுக்களின் பிரதிநிதிகள் மனித உரிமை அத்துமீறல்களால் பாதிக்கப்பட்டவர்கள் போன்ருேரையும் இத் தூதுக் குழு சந்திக்க திட்டமிட்டுள்ளது. -ரி

### ஆயுதக

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கிடைத்தது.

இந்த ஆயுதங்களை கொள்வனவு செய்வதற்கான ஆயத்தங்களை செய்துகொண்டிருந்தபோது இவற்றைக் கொள்வனவு செய்வதற்கு நிதி வசதிகள் இல்லை என திறைசேரி கையை விரித்துள்ளது.

எனினும் இந்த ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்கு நிதி உதவித் திட்டம் ஒன்றைத் தயாரிக்குமாறும் திறைசேரிகேட்டுக்கொண்டது

டெண்டர் முறைக்கு வெளியிலேயே இந்தக் ஆயுதக் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டது. இரண்டு அரசுகளுக்குமிடையில் ஒப்பந்தம் செய்துகொள்ளும்விதமாகவே இது மேற்கொள்ளப்பட்டது.

ஆயுதங்கள் கொள்வனவு செய்யும்போது எமக்கு இங்கு இன்னஆயுதம் தேவை என்ருே அல்லது இன்ன ஆயுதங்களையெல்லாம் வாங்கிஞேம் என்ருே நாம் வெளி உலகுக்கு சொல்வதில்லை. இது வழக்கமும் அல்ல. இதை இரகசியமாகவே நாம் சொல்லவேண்டும், உலகச் சந்தையில் ஆயுதங்கள் விற்பனை செய்யப்படும் ரீதியின் அடிப்படையிலேயே அவை கொள்வனவு செய்யப்பட்டன என்ருர். -இ-ரி

### பாதுகாப்பு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 17 வருட காலத்தின் பின்பு பாதுகாப்புத் துறை செயலராக நியமிக்கப்பட்ட முதாலவது சிவில் அதிகாரி பாலபத்த பென்டிஎன்பது குறிப்பிடத்தக்கது.

பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் கொள்கைகளை பொறுத்தவரையில் சிவில் அதிகாரி ஒருவரை பாதுகாப்புத்துறை செயலராக நியமிப்பதில் கூடிய அக்கறை செலுத்திவந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆனல் முன்னைய பாதுகப்புத்துறை செயலர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கவிற்கும் பொதுசன ஐக்கியமுன்னணி அரசாங்கத்திற்கும் இடையில் கருத்துவேறுபாடுகள் சில இருந்தன. என்பது உண்மையே யாயினும்கூட ஹமில்டனின் விசுவாவாசம் குறித்து எவரும் குறைத்து மதிப்பிடுவதற்கு இல்லை என்று பி. பி. சி. தெரிவித்தது.

வடபகுதிப் பிரச்னையைப் பொறுத்தவரையில் சமாதான வழிமுறைகளில் அன்றி இராணுவ அணுகுமுறை மூலம் இப்பிரச்னையை தீர்த்து வைக்க வேண்டும் என்பதே ஹமில்டன் வனசிங்கவின் ஒரே குறிக்கோளாக இருந்தது.

ஆனல் கடந்த ஆட்சிக் காலத்தில் ரஷ்யாவிடமிருந்து ஏழு கோடி அமெரிக்க டொலர் செலவில் கொள்வனவு செய்ய திட்டமிட்டிருந்த ஆயுதக் கொள்வனவை சந்திரிகா பண்டாரநாயக்கா பிரதமராக தெரிவு செய்யப்பட்டவுடன் இரத்து செய்துவிட்டமையானது சந்திரிகா - ஹமில்டன் உறவில் சற்று விரிசலை ஏற்படுத்தியிருந்தது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் ஹமில்டன் வனசிங்க இதுவரையில் பாதுகாப்புதுறை செயலராக பதவி வகித்ததும் ஆச்சரியப்படத்தக்க ஒரு விடயம் என பி. பி. சி தெரிவித்தது.

சி-க-இ-ரி